கிருஷ்ண தேவராயரின் போர்க் குதிரை ஒன்றின் மீதேறி சவாரி செய்ய தெனாலிராமன் ஆசைப்பட்டான்.

ஆனால் முரட்டுக் குதிரை மீது ஏறியதும் அது குபீரெனக் கிளம்பி அவனைக் கீழே தள்ளிவிட்டது.

அதைக்கண்டு இராயர் ஏளனமாகச் சிரித்தார். ராமனோ சிறிதும் விட்டுக்கொடுக்காமல் "**அரசே! இந்தக்குதிரை இதுவரை என்னை விட எடையும், பலமும் குறைந்தவர்களையே சுலபமாகத் தூக்கிச் சென்றிருக்கிறது.**
**இதனால்தான் நீங்களும் இதன் மீது சவாரி செய்திருக்கிறீர்கள்! ஆனால் என்னுடைய எடை அது தூக்க முடியாதளவு பளுவாக இருந்ததால் பாரம் தாங்காமல் என்னைச் கீழே தள்ளிவிட்டது!**" என்று சிரித்தான்.

TamilBook